

திருவள்ளூர் மத்திய மாவட்ட அவசர ஆலோசனை கூட்டம் பூவிருந்தவல்லியில் மாவட்ட அவைத் தலைவர் ம.இராஜி தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு நாசர் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார் உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ கே. ஜெ.ரமேஷ், பி.டி.சி.செல்வராஜ், நிவேதா ஜெசிகா, சி.ஜெரால்டு, வி.ஜெ.சீனிவாசன். எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், எம்.முத்தமிழ்செல்வன், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர், ப.ச.கமலேஷ், தி.வே.முனுசாமி, டி.தேசிங்கு, ஆர்.ஜெயசீலன், ஜி.ஆர்.திருமலை, சே.பிரேம் ஆனந்த், தி.வை.இரவி, என்.இ.கே.மூர்த்தி, முரளிகிருஷ்ணன், தங்கம்முரளி, பேபிசேகர், பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், உள்பட நிர்வாகிகள் உள்ளனர்



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (10.09.2025) சென்னை, பெரம்பூர் சேமாத்தம்மன் திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகளை நேரில் ஆய்வு செய்தார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மண்டல குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

### மகாகவி பாரதியார் நினைவு நாளான மகாகவி நாள் –

# சென்னை மாகாண முன்னாள் முதல்வர் டாக்டர் ப.சுப்பராயன் பிறந்த நாள் நிகழ்ச்சிகள்!

## அமைச்சர் பெருமக்கள் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்!

சென்னை, செப். 11–

மகாகவி பாரதியார் நினைவு நாளான மகாகவி நாள் சென்னை மாகாண முன்னாள் முதலமைச்சர் டாக்டர். ப. சுப்பராயன் பிறந்த நாள் நிகழ்ச்சிகளில், அமைச்சர் பெருமக்கள் பங்கேற்று அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில், 11.9.2025 அன்று சென்னை மாகாண முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, காலை 9.30 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கும், அதே நாளில் மகாகவி பாரதியார் அவர்களின் நினைவு நாளான மகாகவி நாளில், காலை 10.00 மணியளவில் சென்னை, மெரினா கடற்கரை, காமராசர் சாலையில் அமைந்துள்ள பாரதியாரின் திருவுருவச் சிலைக்கும், அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து அருகில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவப் படங்களுக்கு மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

மகாகவி பாரதியார் அவர்கள் 11.12.1882 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயர் – இலட்சுமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவரது கவிப்புலமையைப் பாராட்டி எட்டயபுர மன்னர் இவருக்கு, "பாரதி" என்று பட்டம் வழங்கினார். அதன்பின், நவீன தமிழ்க் கவிஞர்களின் முன்னோடியாகவும், தமிழ் மொழியில் சிறந்த இலக்கியவாதியாகவும் திகழ்ந்த பாரதியார், "மகாகவி எனும் புனைபெயர் கொண்டு அழைக்கப் பெற்றார். தந்தை இறந்த பிறகு சில காலம் தமது அத்தையாருடன் பாரதியார் காசியில் வாழ்ந்தார்.

மகாகவி பாரதியார் தமிழ், இந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளில் புலமை பெற்று விளங்கினார். மகாகவி பாரதியார் பல மொழிகளைக் கற்றறிந்தாலும், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாடி தமிழின் பெருமையை உலகறியச் செய்தார். மதுரை சேதுபதி பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். 1904 முதல் 1906 வரை "சுதேச மித்திரன் பத்திரிகையில் பணியாற்றினார். 1907 ஆம் ஆண்டு இந்தியா என்ற வார இதழையும், பாலபாரதம் என்ற ஆங்கில இதழையும் பொறுப்பேற்று நடத்தினார்.

கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற காவியங்களைப் படைத்தார். கீதையைத் தமிழில் மொழி பெயர்த்தார். மகாகவி பாரதியார் தமிழ்ப்பற்று, தெய்வப்பற்று, தேசப்பற்று, மானுடப்பற்று ஆகிய நான்கும் கலந்தவர். மகாகவி பாரதியார் மறைந்து நூறு ஆண்டுகள் கடந்தும், தமிழ்ச் சமுதாயத்திற்காக அவர் விட்டுச் சென்ற கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் உயிரோட்டமாக நிலை பெற்றுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்களால், "மக்கள் கவி" என்று அழைக்கப்பட்டார் மகாகவி பாரதியார்.

பாரதியாரின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கையால், ஆங்கில அரசால் கைது செய்யப்பட்டு கடலூர் சிறையில் அடைக்கப்பட்டார். 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் நாள் மறைந்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்த இல்லம் 12.5.1973 அன்று அரசுடைமையாக்கப்பட்டு நினைவு இல்லமாக மேம்படுத்தப்பட்டு இன்றளவும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாரதியின் நினைவு நாளான செப்டம்பர்–11, "மகாகவி நாள்"–ஆகக் கடைப்பிடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் சார்பில் "மகாகவி நாள்" ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு குமார மங்கலத்திற்கு அருகேயுள்ள போக்கம்பாளையத்தில் பிறந்தார். இவர் ஜமீன்தார் குடும்பத்தைச் சார்ந்தவர் ஆவார். சென்னை மாநிலக் கல்லூரியில் இளங்கலைப் பட்டமும், ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும், அயர்லாந்து டப்ளின் பல்கலைக்கழகத்தில் சட்டப் பயிற்சி பட்டமும் பெற்றார்.

1918 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார் . டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் சென்னை மாகாணத்தின் உள்ளாட்சித் துறை அமைச்சர், கல்வி மற்றும் சட்ட அமைச்சர், உள்துறை அமைச்சர், சட்டமன்ற மேலவை உறுப்பினர். இந்தோனேசியாவிற்கான இந்தியத் தூதுவர், இந்திய நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர், மாநிலங்களவை உறுப்பினர் ஆகிய பதவிகளை வகித்தார்.

சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகவும் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் பதவி வகித்தார். இவரது ஆட்சிக் காலத்தில் தான், முதல்முறையாக அரசாங்கப் பணிகளில் வகுப்புவாரி பிரநிதித்துவ அடிப்படையில் இடஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

1937 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்திற்கு மாநில சுயாட்சி வழங்கப்பட்டபின் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இராஜகோபாலச்சாரி அமைச்சரவையில் சட்டம் மற்றும் கல்வித் துறை அமைச்சராகப் பதவி வகித்தார். 1942 இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கு கொண்டு சிறை சென்றார்.

ஒன்றிய அரசின் தபால் துறை அமைச்சராக இருந்தபோது திருவள்ளுவர் மற்றும் பாரதியாரின் புகைப்படத்துடன் கூடிய தபால் தலைகளை வெளியிட்டார். அனைத்துத் தபால் துறை படிவங்களையும், தமிழ் மொழியிலும் கிடைக்கப் பெறச் செய்தார். இந்தியப் பாராளுமன்றத்தில் திருவள்ளுவர் படத்தைத் திறக்கச் செய்தார்.

தமிழுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அயராது உழைத்தவரான சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரான டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில், முதலமைச்சர் அவர்கள் சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அன்னாரின் திருவுருவச்சிலையை நிறுவி, 5.9.2023 அன்று திறந்து வைத்தார்கள்.

சென்னை மாகாண முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 11 ஆம் நாள் அரசு விழாவாகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மகாகவி பாரதியார் நினைவு நாள், டாக்டர் ப.சுப்பராயன் பிறந்த நாள் ஆகிய இரண்டு நிகழ்ச்சிகளிலும் அமைச்சர் பெருமக்களுடன், மேயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிவிப்பு!

*திருவள்ளூர் செப் 11;-*

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் கழக துணை பொதுச்செயலாளர் மண்டல பொறுப்பாளருமான ஆ.இராசா எம்.பி, தமிழ் நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் ஆலோசனைப்படி

11-09-2025 இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெறுகிறது

அதுசமய இக்கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.. ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ இ.ஏ.பி. சிவாஜி, பி.ஜெ.மூர்த்தி தொகுதி பார்வையாளர்கள் சுரேஷ் செல்வராஜ், கவி.கணேசன், மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம்.எல். ரவி, எஸ்.ரமேஷ், மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ. அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ராபர்ட்ராஜதுரை, ஏ.கே.சுரேஷ் பொதுகுழு உறுப்பினர்கள் கே.சுப்பிரமணி, பி. வெங்கடாசலபதி, ஏ.வி.



ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், கி.வே. ஆனந்தகுமார், மு. மணிபாலன், ஆ.சத்தியவேல், ஜான்பொன்னுசாமி, ந.பரிமளம், நா.செல்வசேகரன், கா.சு.ஜெகதீசன், மு.முரளிதரன், ஆ. ராஜா, வே.ஆனந்த் குமார், ஏ.ஆர்.டி.உதயசூரியன், இரா.அறிவழகன், ஜி.ரவிக்குமார், அபிராமிகுமரவேல், பி.முத்து, க.சு.தமிழ உதயன் உள்பட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் முன்னாள் இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் பொருள் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தலைமையிலான மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பொருள் குறித்து, செப்டம்பர் 17 - கரூர் முப்பெரும் விழா குறித்து என மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ் அறிக்கை வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

### மாவட்ட துணைச் செயலாளர் மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்

### வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில், மாவட்ட துணைச் செயலாளராக (பொது) தேர்ந்தெடுக்கப்பட்ட டிவி.கோகுலகண்ணன் அவர்கள் அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதாலும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட இரா.நாகன் மறைவெய்திய காரணத்தாலும், மாவட்ட துணைச் செயலாளர் (பொது) மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகள் நிரப்பப்பட வேண்டி இருப்பதால்;**

**மேற்சொன்ன பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, செப்டம்பர் 12 (வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

**வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகர/ஒன்றிய/நகர/பகுதி/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.**

**வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.**

**"அண்ணா அறிவாலயம்"**
**சென்னை – 18.**
**நாள் : 10–09–2025.**

**துரைமுருகன்,**
**பொதுச்செயலாளர்,**
**தி.மு.க.**





காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் குண்ணவாக்கம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் நேற்று காலை அந்த கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைபெற்றது. காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் சுந்தர் எம்எல்ஏ பயனாளிகளுக்கு வழங்கினார். அருகில் ஒன்றிய செயலாளர் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மாணிக்கவேல், சூர்யா, ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் யோகநாதன், மாவட்ட கவுன்சிலர் சிவராமன், கவுன்சிலர் நதியா கோபி,நிர்வாகிகள் கார்த்திக் பாலமுருகன் விஷ்ணு முரளி, ரத்தினமாலா, கோகுலக்கண்ணன், ஜெயந்தி, முரளி, சுஜாதா ஜெயராமன், அமுதா தமிழ்வேந்தன், இளங்கோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சேலம் மத்திய மாவட்டம்

# சேலம் மாநகரம் - 31 மற்றும் 49 ஆகிய வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

**சேலம் மத்திய மாவட்டம், சேலம் மாநகரம், கோட்டை பகுதி,** 31வது வட்டச் செயலாளர் எஸ். சையத் இப்ராஹிம் அவர்கள், கோட்டை பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவரை வட்டச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **திரு. ஏ. அப்துல் ரசாக்** (68/39, துபால் அகமது தெரு, சேலம்-636 001) அவர்கள் 31வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

**அன்னதானப்பட்டி பகுதி,** 49வது வட்டச் செயலாளர் குமரன் ர.கார்த்திகேயன் அவர்கள் அன்னதானப்பட்டி பகுதிப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவரை வட்டச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. **கே.ஆர்.டி.சசிகுமார்** (4/700, அகரம் காலனி, அன்னதானப்பட்டி, சேலம்-636002) அவர்கள் 49வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 10.09.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

### தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி, 152வது வட்டத்தைச் சேர்ந்த அ.ஜெயசீலன் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 10.09.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி 37வது வார்டில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ முகாமை துவக்கி வைத்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று உடனடியாக தீர்வு கண்டு அதற்கு உண்டான சான்றிதழ்களை பயனாளிகளுக்கு வழங்கினார். அப்பொழுது மேயர் க. வசந்தகுமாரி துணை மேயர் கோ.காமராஜ் செம்பாக்கம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன் மாநகராட்சி துணை ஆணையர் பல்வேறு துறை அதிகாரிகள் மாமன்ற உறுப்பினர் மகாலட்சுமி கருணாகரன் வட்டக் கழக செயலாளர் மன்னா ராஜ கண்ணா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.





திருவள்ளூர் சி.எஸ்.ஐ.கௌடி மேல்நிலைப் பள்ளியில் 2025 – ம் ஆண்டிற்கான ஆசிரியர் தின விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் பங்கேற்று ஆசிரிய பெருமக்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கி வாழ்த்துரை வழங்கினார். நிகழ்வில் தலைமை ஆசிரியர் ஏ.குளோரி சாந்தகுமாரி, பள்ளி தாளாளர் ஒய். மேரி கற்பகம், நகர செயலாளர் சி.சு.இரவிச்சந்திரன், நகர்மன்ற தலைவர் உதயமலர்பாண்டியன், மத்திய வட்டார தலைவர் டி.ஜான் சாலமன், இணை ஆயர் திருவள்ளூர் குருசேகரம் எஸ்.பரிமளா ரவி நேசகுமார், பள்ளி நிர்வாககுழு தலைவர் டி.செல்வராஜ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி.எஸ்.நேதாஜி, நகராட்சி முன்னாள் தலைவர் பொன்.பாண்டியன், நகர்மன்ற உறுப்பினர்கள் ஆர்.பிரபு, வி.இ.ஜான், நீலாவதி பன்னீர்செல்வம், உள்ளிட்ட முன்னாள் தலைமை ஆசிரியர்கள், இருபால் ஆசிரியர் பெருமக்கள், பள்ளி அலுவலக ஊழியர்கள், மாணவ செல்வங்கள் பங்கேற்றனர்.